# தாமான் டேசா மேம்பாட்டுத் திட்டம்: எங்களுடைய கருத்துகளை காது கொடுத்து கேளுங்கள்

## டி.பி.கே.எல்.லிடம் குடியிருப்பாளர்கள் கோரிக்கை

பெட்டாலிங் ஜெயா, செப். 2-

தாமான் டேசாவில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டிருக்கும் மேம்பாட்டு திட்டம் தொடர்பில் அப்பகுதி மக்கள் தெரிவிக்கும் கருத்துகளை காது கொடுத்து கேட்குமாறு கோலாலம்பூர் மாநகர மன்றத்தை (டி.பி.கே.எல்.) குடியிருப்பாளர்கள் சங்கம் ஒன்று கேட்டுக் கொண்டிருக்கிறது.

ஓர் உத்தேச மேம்பாட்டுத் திட்டம் குறித்து டி.பி.கே.எல்.லுடன் சமீபத்தில் நடத்தப்பட்ட ஒரு சந்திப்பு பற்றி நிலையான மேம்பாட்டிற்கான கோலாலம்பூர் குடியிருப்பாளர்கள் நடவடிக்கை சங்கம் விவரித்தது.



குடியிருப்பாளர்களின் கேள்விகளில் பெரும் பாலானவை கவனத்தில் கொள்ளப்பட்டது சரி என்ற பதில்கள் மட்டுமே சந்திப்புக்கு தலைமையேற்றவரிடம் இருந்து வந்தன அல்லது மௌனமே பதிலாக இருந்தது என்று சங்கம் ஓர் அறிக்கையில் தெரிவித்தது.

இந்த மௌன பதில்களும் ஒரு பக்க உரையாடலும் உள்விவாதங்களுக்கு பின்னர் ஓர் எழுத்துப்பூர்வமான பதிலை டி.பி.கே.எல். வழங்கும் என்ற எண்ணத்தை அவர்களுக்கு ஏற்படுத்தியது. ஆனால் எந்த பதிலும் வரவில்லை.

மாநகர திட்டமிடல் என வரும் போது குடியிருப்பாளர் களுடன் டி.பி.கே.எல். வெளிப்படையாகவும் பொறுப்புடனும் நடந்து கொள்வதில்லை என்பதை இது காட்டுகிறது என்று சங்கம் கூறிற்று.

தாமான் டேசாவில் எதிர் கால வீடமைப்புத் திட்டங்களுக்கு அனுமதி வழங்குவதற்கு முன்னர் கவனத்தில் எடுத்து கொள்ள வேண்டிய மூன்று முக்கிய பிரச்சினைகளை வலியுறுத்தி டி.பி.கே.எல்.க்கு ஒரு நான்கு பக்க கடிதத்தை தான் அனுப்பியிருப்பதாக சங்கம் தெரிவித்தது.

போக்குவரத்து மற்றும் வடிகால் அமைப்பு அடிப்படை வசதிகள் பற்றாக்குறை, போதிய பொது போக்குவரத்து இல்லாமை ஆகியவையே அந்த பிரச்சினைகள்.